**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08 ம் நாள் திங்கட்கிழமை

**இ.ம.எண்.11/2025 அதன் அ.வ.எண்.235/2022**

**கண்ணன்,**
**மனுதாரரின் பொது அதிகார முகவரான**
**சேதுராம சுந்தரம் மூலம்** ... மனுதாரர் /1ம் பிரதிவாதி

–எதிர்–

**மைதீன் பிச்சை** ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என்முன்பாக 25.08.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.அபுதாகீர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்/1ம் பிரதிவாதி கண்ணனை பி.வா.சா.3 ஆக விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி, மனுதாரரால் பிரிவு 151 சி.பி.சி.ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கை மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக பிராது 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்

கட்டளை பரிகாரமும், பிராது 3ம் தபசில் சொத்தைப் பொறுத்து செயலுறுத்துக் கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதான வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிக்காக 16.06.2025ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே மனுதாரர் தரப்பில் அவருடைய பவர் ஏஜெண்ட் ஆன சேதுராம சுந்தரம் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், வழக்கின் தாவாவை முடிவு செய்யக்கூடிய முக்கிய ஆவணங்கள் தற்போது மனுதாரருக்கு கிடைத்துள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் பொறுத்து சாட்சியம் அளிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) மேற்படி ஆவணங்கள் பொறுத்து மனுதாரரின் பவர் ஏஜெண்டுக்கு தெரியாது என்றும், மேலும், மனுதாரர் வெளிநாட்டில் பணிபுரிந்ததால் பவர் ஏஜெண்டை நியமனம் செய்துள்ளார் என்றும், தற்போது இந்தியா வந்த மனுதாரர் வழக்கு கட்டுகளை பார்வையிட்டதில் சில முக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் விட்டு போன விபரம் தெரிய வந்தது என்றும், ஆகவே, மனுதாரரை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனுவை அனுமதிக்காத பட்சத்தில் மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட, நஷ்டம் உண்டாகக்கூடும் எனக் கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3) எதிருரை சுருக்கம்

3.1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து எந்தவிதத்திலும் நிரூபிக்கக்கூடிய ஆவணங்களாக இல்லை என்றும், மேலும் மேற்கூறிய ஆவணங்கள் மனுதாரரின் வழக்கை எந்தவிதத்திலும் நிரூபிக்கக்கூடியதில்லை

என்றும், வழக்கினை காலம் கடத்தவும், இந்த எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஆக்கிரமித்ததை மறைக்கும் விதமாக பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்து வழக்கை காலம் கடத்தி வருகின்றனர் என்றும், எனவே, இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரரை பி.வா.சா.3 ஆக விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார்.

6.1) எதிர்மனுதாரர்/வாதியால் விளம்புகை பரிகாரம், நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். மனுதாரர்/1ம் பிரதிவாதி கண்ணன் என்பவர் அவரது பொது அதிகார முகவர் மூலம் இந்த வழக்கை நடத்தி வருகிறார். அசல் வழக்கில் எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் சாட்சியம் முடிந்த பின்னர் மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டது.

7) மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் பொது அதிகார முகவர் சேதுராம சுந்தரம் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம்

பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் 3ம் தரப்பினரான மணி என்பவர் பி.வா.சா.2 ஆக மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.13 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) இந்த சூழ்நிலையில், மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட போது, மனுதாரர்/1ம் பிரதிவாதி கண்ணன் என்பவர் தன்னை பி.வா.சா.3 ஆக விசாரிக்கக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் / 1ம் பிரதிவாதி கண்ணன் என்பவரை அவரது தரப்பில் மற்ற சாட்சிகளை விசாரித்த பின்னர், தன்னை கடைசியாக விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ள அனுமதி எதையும் இந்நீதிமன்றத்தில் பெறுவதற்கு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு மனு எதுவும் தாக்கல் செய்து அனுமதி பெறாமல் அவரது தரப்பில் பி.வா.சா.1, பி.வா.சா.2 விசாரணை செய்யப்பட்ட பின்னர் மனுதாரர் / 1ம் பிரதிவாதி கண்ணன் தன்னை பி.வா.சா.3 ஆக விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ள முடியாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர்/ 1ம் பிரதிவாதி கண்ணனை பி.வா.சா.3 ஆக விசாரணை செய்ய அனுமதித்தால் அவரது தரப்பில் ஏற்கனவே முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் விடப்பட்ட குறைகளை சரி செய்யும் வகையில் மனுதாரர் / 1ம் பிரதிவாதி சாட்சியம் அளிக்கக் கூடும் என்பதாலும், இந்நீதிமன்றத்தில் மனுதாரர் / 1ம் பிரதிவாதி தன்னை அவரது தரப்பில் சில சாட்சிகளை விசாரித்த பின்னர் தன்னை விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ள அனுமதி எதுவும் பெறவில்லை என்பதாலும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை என்பதாலும், நீதியின் நலன் கருதியும், மனுவின்

தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியில், இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Order uploaded on 08.09.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.09.08 16:05:27 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

Order uploaded on 08.09.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.09.08 16:05:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

<u>**இ.ம.எண்.11/2025 இன்**</u>

<u>**அ.வ.எண்.235/2022**</u>

சீரான/ வரைவு – உத்தரவு

<u>08.09.2025.</u>